සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) I
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I
Drama and Theatre (Tamil) I

58 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

| பகுதி I | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

சுட்டெண் : ..............................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
※ பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
※ இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் மிகப் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**1.** "புலக்காட்சிப் பொருளே கலை" எனக் குறிப்பிட்டவர்
(1) அரிஸ்டோட்டில் (2) ஹெகல் (3) பியேட்ஸ்லி
(4) எரிக் நியூட்டன் (5) டால்ஸ்ராய்
(........)

**2.** கலை தொடர்பாக அறிஞர் அரவிந்தர் அவர்களின் கருத்து
(1) தூய உள்ளுணர்வின் வெளிப்பாடே கலையாகும்.
(2) 'போலச் செய்தல்' கலைகளுக்கு அடிப்படையாகும்.
(3) கலை என்பது மனித உணர்வுகளின் வெளிப்பாடாகும்.
(4) தான் பெறும் அனுபவத்தைப் பிறரும் அனுபவிக்க வைப்பது கலையாகும்.
(5) அழகைக் கண்டுபிடிப்பதும் அதனை வெளிப்படுத்துவதும் கலையாகும்.
(........)

**3.** பின்வருவனவற்றுள் பாலமுரளி கிருஸ்ணா, ருக்மணி அருண்டேல், சின்னமணி, நாகமணிப்போடி ஆகியோருடன் தொடர்புடைய கலை வடிவங்கள் முறையே
(1) இசை, நாடகம், வில்லிசை, கூத்து
(2) நடன நிகழ்ச்சி, வில்லிசை, கதாப்பிரசங்கம், பாடல்
(3) பாடல், கதாகாலேட்சபம், நடன நிகழ்ச்சி, கூத்து
(4) இசை, நடன நிகழ்ச்சி, வில்லிசை, கூத்து
(5) நாடகம், இசை, நடன நிகழ்ச்சி, கூத்து
(........)

**4.** பின்வருவனவற்றுள் 'ஒபேறா' கலை வடிவம் பற்றிய **பொருத்தமற்ற** கூற்று யாது?
(1) இத்தாலியில் தோற்றம் பெற்றது.
(2) இசையைப் பிரதானமாகக் கொண்டது.
(3) பாடலும் இசையும் இணைந்திருக்கும்.
(4) நடனக் கலைஞரால் நிகழ்த்திக் காட்டப்படும்.
(5) சீனாவிலும் காணப்படுகிறது.
(........)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



5. பின்வருவனவற்றுள் 'கேட்பியக் கலைகள்' யாவை?
(1) பலே, நாடகம் (2) இசை நாடகம், ஒபேறா
(3) இசை, வானொலி நாடகம் (4) கூத்து, சினிமா
(5) வில்லிசை, சிற்பம் (........)

6. பின்வருவனவற்றுள் யப்பானிய பொம்மலாட்ட அரங்கு எது?
(1) வயாங்குலிற் (2) மயாங் (3) புன்ரகு
(4) லூத்துருக் (5) உடக்குப்பாஸ் (........)

7. கிரேக்கத்தில் டயோனிசியஸ் உருவம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்போது சில இடங்களில் தரித்து நின்று கூட்டாகப் பாடும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?
(1) பரடொஸ் (2) பரபாசிஸ் (3) கொறிகஸ்
(4) ஸ்ரசிமன் (5) இசைப்பா முகாரி (........)

8. "சுவைபட வந்தனவெலாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல் நாடகம்" என விளக்கியவர்
(1) பரதர் (2) அபிநவகுப்தர் (3) இளம்பூரணர்
(4) அடியார்க்கு நல்லார் (5) தனஞ்சயர் (........)

9. பின்வருவனவற்றுள் சமஸ்கிருத நாடகங்களில் அரசருக்குப் புத்திமதி கூறும் பாத்திரம் யாது?
(1) கோமாளி (2) கோடங்கி (3) கட்டியக்காரன்
(4) பபூன் (5) விதூசகன் (........)

10. பின்வருவனவற்றுள் யதார்த்த நாடகம் எனக் கருதப்படக்கூடியது
(1) மூன்று பென்னிக் காசுகள் (2) கலிலியோ
(3) கடவுளுக்காகக் காத்திருத்தல் (4) தலைவர்
(5) ஒரு பாவையின் வீடு (........)

11. பின்வருவனவற்றுள் கிரேக்க நாடகாசிரியர் ஈஸ்கிலஸ் பற்றிய சரியான கூற்று யாது?
(1) உளவியல்சார் நாடகங்களை எழுதினார்.
(2) மூன்றாவது நடிகரைத் தோற்றுவித்தார்.
(3) அக்கால அரசியற் கொள்கைகளைக் கேலி, கிண்டல் செய்தார்.
(4) ஒரு வகையான அவல-மகிழ்நெறி நாடகங்களைப் படைத்தார்.
(5) முக்கூட்டு நாடகத் தொகுதியை எழுதினார். (........)

12. எந்தையும் தாயும் எனும் நாடகத்தில் இடம்பெறும் 'சங்கரப்பிள்ளை' பாத்திரம் தனக்குள் அடிக்கடி ஏங்கித் தவித்து அழைக்கும் பாத்திரம் எது?
(1) மோகன் (2) மகேசன் (3) கண்ணன்
(4) வசந்தி (5) மகேஸ்வரி (........)

13. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
அ - சமயம், சமூகம், பொருளாதாரம் என்பன சித்திரிப்பில் செல்வாக்குச் செலுத்தும்.
ஆ - மறுதலைப்பாகம் ஆடுதல் எனவும் அழைக்கப்படும்.
இ - பாத்திரம் ஒன்றை ஏற்கும்போது தனியாள் மனப்பாங்கு, நடத்தைக்கோலம் என்பவற்றிற்கு ஏற்ப வேறுபடும்.
ஈ - உடல்வழிச் சித்திரிப்பால் மட்டுமே வெளிப்படுத்தப்படும்.
உ - உடல், உளம், குரல் சார்ந்தும் அகம், புறம் சார்ந்தும் வேறுபட்ட வகையில் வெளிக்காட்டப்படும்.
இவற்றுள் வகிபாகச் சித்திரிப்புத் தொடர்பான சரியான கூற்றுக்கள் யாவை?
(1) அ, ஆ, இ (2) அ, இ, உ (3) ஆ, இ, ஈ
(4) ஆ, இ, உ (5) இ, ஈ, உ (........)

14. சமஸ்கிருத நாடக மரபில் 'நாடகப் பொருளுக்கு விதை போன்றது' எனக் குறிப்பிடப்படுவது
(1) பீஜ (2) பிந்து (3) பதகா
(4) பிரகரி (5) கார்ய (........)

15. கிரேக்கத்தில் புதிய மகிழ்நெறியின் தந்தை எனப் போற்றப்படுபவர்
(1) மெனாண்டர் (2) அரிஸ்ரோபேன்ஸ் (3) ரெரன்ஸ்
(4) செனேக்கா (5) அரிஸ்டோட்டில் (........)

[பக். 3 ஐப் பார்க்க

**16.** 'கூத்தம்பலம்' தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்று யாது?
(1) சமஸ்கிருத அரங்க வடிவத்தின் மாதிரியாக இந்தியாவில் காணப்படுகிறது.
(2) கேரளாவில் குருவாயூர்க் கோவில், வடக்கு நாதர் கோவில் ஆகியவற்றில் காணப்படுகிறது.
(3) கூரையுள்ள அடைக்கப்பட்ட ஓர் அரங்காகும்.
(4) தமிழ் நாட்டில் சிதம்பரக் கோவிலில் காணப்படுகிறது.
(5) தெருக்கூத்துகள் நடித்துக் காட்டப்படும். (........)

**17.** வடமொழி நாடகக் கட்டமைப்பில் 'நோக்கம் நிறைவேறிப் பயனடைதல்' என்பதைக் குறிப்பது
(1) ஆரம்ப (2) பிரத்தியாச (3) நியதாப்தி
(4) பிரயத்ன (5) பலாகம (........)

**18.** உயிர்த்துடிப்புள்ள மனிதனைப் பிரதான வெளிப்பாட்டு ஊடகமாகக் கொண்ட கலைகள் மட்டும் உள்ளடங்கியுள்ள தொகுதி யாது?
(1) இசை, நாடகம், செதுக்கல் (2) சித்திரம், சிற்பம், கட்டடக்கலை
(3) நாடகம், நடனம், கைவினை (4) இசை, நடனம், நாடகம்
(5) இலக்கியம், வில்லிசை, நாவல் (........)

**19.** நடிபாகமளித்தல், செலவுகளைப் பொறுப்பேற்றல், மேடைக்காட்சிகளை ஒழுங்குபடுத்தல் எனும் செயற்பாடுகளுக்குப் பொறுப்பு வகிப்போர் முறையே
(1) நாடகாசிரியர், நெறியாளர், நடிகர்
(2) தயாரிப்பாளர், நெறியாளர், மேடை முகாமையாளர்
(3) நெறியாளர், தயாரிப்பாளர், மேடை முகாமையாளர்
(4) நாடகாசிரியர், இசை அமைப்பாளர், தயாரிப்பாளர்
(5) மேடை முகாமையாளர், தயாரிப்பாளர், நடிகர் (........)

**20.** பின்வரும் கூற்றுக்களுள் 'கற்பிதவாதம்' தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்று யாது?
(1) சிறந்த கலை என்பது கட்டுப்பாடுகள் அற்ற நிலைமையில் பிறப்பதாகும்.
(2) தனிமனிதன் தன்மன உந்துதல் காரணமாக எல்லாத் தடைகளையும் உடைத்து வெற்றியீட்டுவான்.
(3) கலைஞன் வாழ்வை இலட்சிய நோக்கில் பார்ப்பான்.
(4) யதார்த்தத்தைப் பொருட்படுத்தாத காதல் முறையாகும்.
(5) நல்லவர் நன்மை பெறுவர், தீயவர் தண்டனை பெறுவர் என்ற அடிப்படைச் சிந்தனைகளைக் கொண்டது. (........)

**21.** ஆற்றுவோனது உணர்வுச் சூழலுக்குள் பார்ப்போர் உள்ளீர்க்கப்பட்டிருக்கும் ஒத்த உணர்வு நிலையைப் பரதர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
(1) சகிர்தய (2) கதாசிஸ் (3) அனுபாவ
(4) சுவை (5) யூகென் (........)

**22.** பின்வருவனவற்றுள் அரிஸ்ரோபேன்ஸின் மகிழ்நெறிக்குரிய பண்பு யாது?
(1) தனிநபர் மீது கிண்டல், கேலி இல்லாது மக்களின் அன்றாட வாழ்வு பற்றிப் பேசுதல்
(2) அரசியல்வாதிகளையும் அரசியற் கொள்கைகளையும் கேலி, கிண்டல் செய்தல்
(3) யதார்த்தப் பண்பு நிறைந்ததாகக் காணப்படுதல்
(4) ஆழமான கேலி, கிண்டல் இல்லாதிருத்தல்
(5) நகர்சார் சமூக விடயங்களைக் கற்பித முன்னெடுப்புடன் கையாளுதல் (........)

**23.** பின்வருவனவற்றுள் யப்பானிய 'நோ' அரங்கு பற்றிய சரியான கூற்று யாது?
(1) அரங்கவெளி மலையடிவாரமாக இருத்தல்
(2) ஆடுகளம் வட்ட வடிவில் இருத்தல்
(3) காட்சிகள் கட்டித்தொங்கவிடப்பட்டிருத்தல்
(4) முகமூடிகள் பயன்படுத்தல்
(5) மூன்று மாடிகளைக் கொண்டிருத்தல் (........)

**24.** பின்வருவனவற்றுள் வாழ்வை மிக ஒத்த தன்மையுடைய யதார்த்தப் பாங்கான வேட உடைகள் அதிகளவில் பயன்படுத்தக்கூடிய நாடகம் யாது?
(1) இராவணேசன் (2) சாகுந்தலம் (3) கோடை
(4) ஈடிப்பஸ் (5) கிங்லியர் (........)

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



**25.** ஐரோப்பிய அரங்க வரலாற்றில் 'காவியபாணி' அரங்கக் கோட்பாட்டைத் தோற்றுவித்தவர் யார்?
(1) பிஸ்காட்டர் (2) ஸ்ரனிஸ்லவஸ்கி (3) அயனஸ்கோ
(4) பீற்றர் புறூக் (5) அஸ்வகோஷ் (........)

**26.** சாகுந்தலம் நாடகத்தில் துருவாச முனிவர் பாத்திரம் வெளிப்படுத்தும் உணர்வு யாது?
(1) கோபம் (2) சோகம் (3) வியப்பு
(4) வீரம் (5) மகிழ்ச்சி (........)

**27.** சங்ககால வயிரியர் தமது ஆற்றுகையின்போது பயன்படுத்திய வாத்தியங்கள் யாவை?
(1) கோடு, முழவு (2) முழவு, வயிர் (3) யாழ், தடாரி
(4) கிணை, முரசம் (5) சவணிக்கை, வயிர் (........)

**28.** விவிலியப் பாடல்களிலிருந்து தமது அரங்கிற்கான அடிப்படைகளைப் பெற்றுக்கொண்ட மேலைத்தேய அரங்கவியலாளர்
(1) றிச்சேர்ட் செக்னர் (2) அன்ரனியோ ஆர்த்தே
(3) அகஸ்தா போல் (4) குரொட்டோவ்ஸ்கி
(5) எமிலி சோலா (........)

**29.** பின்வரும் கூற்றுக்களுள் 'வடபாங்குக் கூத்து' பற்றிய சரியான கூற்று யாது?
(1) மன்னார் மாதோட்டத்திற்குரியது ஆகும்.
(2) யாழ்ப்பாணத்திலிருந்து சென்றது.
(3) கடவுள் வாழ்த்து வெண்பாவில் அமைந்திருக்கும்.
(4) ஆடல்கள் வரையறுக்கப்பட்டிருக்கும்.
(5) அரச பாத்திரம் வாளுடன் தோன்றும். (........)

**30.** பின்வருவனவற்றுள் சடங்குகள் தொடர்பான பக்தவத்சல பாரதியின் கருத்து யாது?
(1) சடங்கு என்பது ஒரு நடைமுறை, அது உழைப்புப் போக்கில் இருந்து வேறுபட்டது.
(2) புனிதத் தன்மையின்பால் மக்கள் மேற்கொண்ட நடத்தைக் கோலங்களின் தொகுப்பாகும்.
(3) தன் வாழ்க்கைப் போரில் இயற்கைச் சக்திகளை தன்வயப்படுத்த மனிதன் கையாண்ட உத்திகளாகும்.
(4) சடங்குகள் நம்பிக்கை காரணமாக செய்யப்படுவனவாகும்.
(5) சமயச் சடங்குகளே நாடகத்தின் மூலவேராகும். (........)

**31.** யப்பானிய அரங்கின் தோற்றத்துடன் தொடர்புடைய சடங்கு
(1) வணக்கப்பாடல்கள் (2) டயோனிசஸ் சடங்கு
(3) லெனே விழாச் சடங்கு (4) சம்போசா சடங்கு
(5) களவேள்விச் சடங்கு (........)

**32.** பெண்கள் தாம் விரும்பிய கணவரை அடைதல் எனும் நோக்கில் செய்யப்படும் சடங்கு
(1) குளுர்த்திச் சடங்கு (2) கழிப்புச் சடங்கு
(3) வெறியாட்டு (4) தை நீராடல்
(5) சன்னியக்கும (........)

**33.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
அ - மகாபாரத இராமாயணக் கதைகள் ஆடப்படும்.
ஆ - கூத்தினை சபையோர் நிகழ்த்திச் செல்வர்.
இ - பெருமளவான கத்தோலிக்கப் புனிதர் கதைகள் நடிக்கப்படும்.
ஈ - எஸ்தாக்கியார், மூவிராசாக்கள் போன்றன முக்கியமானவை.
உ - மத்தளமும் தாளமுமே பின்னணி இசைக் கருவிகளாகப் பயன்படுத்தப்படும்.
இவற்றுள் யாழ்ப்பாண வடமோடிக் கூத்து தொடர்பான கூற்றுக்கள் யாவை?
(1) அ, ஆ, இ (2) அ, ஆ, உ (3) அ, இ, ஈ
(4) ஆ, இ, ஈ (5) ஆ, இ, உ (........)

**34.** சத்தியவான் சாவித்திரி இசை நாடகத்தில் கேள்வி - பதில் முறையில் அமைந்த பாடல் எது?
(1) "ஆஹா சத்தியவானென்று..." (2) "கண்ணிழந்து வாடலானோம்..."
(3) "விண்டிலமும் மண்டலமும்..." (4) "ஏனோ எனை எழுப்பலானாய்..."
(5) "வாறான் ஒருவன் மானே..." (........)

[பக். 5 ஐப் பார்க்க


**35.** காத்தவராயன் கூத்தில் வரும் பாத்திரங்களான சிவன், மாரி, நாரதர், டாப்பர் மாமா ஆகியோர் வைத்திருக்கும் கைப்பொருட்கள் முறையே
(1) வாள், வேல், சூலம், விசிறி
(2) தம்புரா, காப்புக்கூடை, வில், வாள்
(3) அம்பு, விசிறி, தம்புரா, சப்ளாக் கட்டை
(4) சூலம், வாள், தம்புரா, விசிறி
(5) வேல், வாள், வில், விசிறி (........)

**36.** நாடக எழுத்துரு ஒன்றில் இடம்பெறும் 'கரு' என்பதற்கான விளக்கம் **அல்லாதது**
(1) நாடகச் சம்பவங்களின் நிரலொழுங்கு
(2) தொடக்கம் முதல் இறுதிவரை விரவி இருப்பது
(3) எழுத்துருவின் மூலக்கூறுகளில் ஒன்று
(4) நாடகத்தின் பிரதான செய்தி
(5) நாடகத்தின் பேசுபொருள் (........)

**37.** பின்வரும் பாடல்களைக் கருதுக.
அ - "தேவலோகம் விட்டுமல்லோ தேவேந்திரன் வருகிறார்..."
ஆ - "பாண்டி மகாராஜர் வந்தாரே - ஒய்யாரமாக..."
இ - "காவி உடுத்தல்லவோ ஆதி சிவனாரும்..."
ஈ - "எல்லைப் பிடாரியே வந்தெம்..."
மேல்வரும் பாடல்கள் இடம்பெறும் ஆற்றுகைகள் முறையே
(1) காமன் கூத்து, இராம நாடகம், கோவலன் கூத்து, செட்டி வர்த்தகன் கூத்து
(2) அர்ச்சுனன் தபசு, பாண்டியன் கூத்து, காத்தவராயன் கூத்து, வடபாங்கு
(3) காமன் கூத்து, கோவலன் கூத்து, காத்தவராயன் கூத்து, நந்தனார் கீர்த்தனை
(4) வடபாங்கு, வடமோடி, காத்தவராயன் கூத்து, இராம நாடகக் கீர்த்தனை
(5) தென்மோடி, பொன்னர் சங்கர், வடபாங்கு, தென்பாங்கு (........)


**38.** எலிசபெத்கால அரங்கில் சேக்ஸ்பியரால் கட்டப்பட்ட குளோப் அரங்கின் வடிவம் யாது?
(1) வட்டம் (2) ஐங்கோணம் (3) எண்கோணம்
(4) சதுரம் (5) நீள் சதுரம் (........)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ள நடிகரால் நடிக்கப்பட்ட பிரசித்திபெற்ற நாடகம் யாது?
(1) அன்னை இட்ட தீ
(2) எந்தையும் தாயும்
(3) யுக தர்மம்
(4) பொய்க்கால்
(5) தான் விரும்பாத் தியாகி



(........)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கு
(1) கிரேக்க காலத்திற்குரியது
(2) ரோமானிய காலத்திற்குரியது
(3) மத்திய காலத்திற்குரியது
(4) 16 ஆம் நூற்றாண்டுக்குரியது
(5) 19 ஆம் நூற்றாண்டுக்குரியது



(........)

* *

[பக். 6 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) I
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I
Drama and Theatre (Tamil) I

58 T I

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**
※ உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

**1.** (i) ஆற்றுகை, ஆற்றுகைக் கலைகள் என்பவற்றை வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)
(ii) ஆற்றுகைக் கலைகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, அவற்றின் ஆற்றுகை முறைகளைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)
(iii) ஆற்றுகைக் கற்கைநெறி பற்றி விளக்குக. (05 புள்ளிகள்)

**2.** (i) நாடக எழுத்துரு ஒன்றில் காணப்படும் கட்டமைப்பு மற்றும் கதைப்பின்னல் என்பவற்றைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)
(ii) கூத்தின் நடிப்பு முறைமைக்கும் யதார்த்த நாடகத்தின் நடிப்பு முறைமைக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளை உமது அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

**3.** பண்பாட்டின் திரள் கலைவடிவமே நாடகமாகும்.
(i) பண்பாட்டிற்கும் அரங்கிற்கும் இடையிலான தொடர்பை விளக்குக. (05 புள்ளிகள்)
(ii) நீர் பங்குபற்றிய அரங்கொன்றில் பண்பாடு வெளிப்பட்ட முறை பற்றியும் அந்த அரங்கு பார்வையாளர் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது பற்றியும் விளக்குக. (10 புள்ளிகள்)

### உபபகுதி B

**4.** நாடக நெறியாள்கை, நாடகத் தயாரிப்பு எனும் எண்ணக்கருக்களை வேறுபடுத்தி, நாடகத் தயாரிப்பு தொடர்பாக இலங்கைத் தமிழ் அரங்கில் காணப்படும் தற்போதைய நிலைமைகளை விளக்குக. (15 புள்ளிகள்)

**5.** பாரம்பரிய சமயச் சடங்குகள் எவையேனும் **இரண்டினை** அரங்க நிலையில் நின்று விவரிப்பதுடன், அவை எவ்வாறு சமூகக் குழும நிலை அரங்காக விளங்குகின்றன என்பதையும் விளக்குக. (15 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.
(i) ஆற்றுப்படுத்தலாக அரங்கு
(ii) வகிபாகச் சித்திரிப்பு
(iii) பாடலே அரங்கு
(iv) அபத்த நடிப்பு முறைமை
(v) படைப்பாக்க இசை

(05 × 3 = 15 புள்ளிகள்)

※※※

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) II
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) II
Drama and Theatre (Tamil) II

58 T II

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

| பகுதி I | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

சுட்டெண் : ..........................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கைகயளிக்குக.
※ பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
※ இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் மிகப் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**1.** யதார்த்தவாத அரங்கின் முன்னோடியாகக் கருதப்படும் நோர்வே நாட்டுக் கலைஞர் யார்?
(1) அன்ரன் செக்கோவ் (2) கென்றி பெக் (3) இப்சன்
(4) ஸ்ரனிஸ்லவ்ஸ்கி (5) ரசீன் (........)

**2.** 'டயோனிசியஸ்' எனப்படும் கருவளத்திற்குரிய வழிபாட்டை கிரேக்கத்தில் நிகழ்த்திய குழு
(1) தியோசிஸ் குழு (2) குரவைப் பாடகர் குழு
(3) டித்திறாம்பிக் குழு (4) அரியோன் குழு
(5) தெஸ்பிசன் குழு (........)

**3.** பின்வருவனவற்றுள் கலை பற்றிய சரியான கூற்று யாது?
(1) பயனை முதன்மையாகக் கொண்டது.
(2) திறனை முதன்மையாகக் கொண்டது.
(3) பிரதியீட்டைக் கொண்டது.
(4) மீளுருவாக்கம் செய்ய முடியாதது.
(5) ஒன்றைப்போல பலவற்றை உருவாக்கக்கூடியது. (........)

**4.** கி.மு. 5 ஆம் நூற்றாண்டளவில் 15 000 பேரைக் கொண்ட அரங்கு எவ்வாறு அழைக்கப்பட்டது?
(1) கொலோனிசிய அரங்கு (2) வட்டப் பேரரங்கு
(3) கிடங்கு அரங்கு (4) மலையடிவார அரங்கு
(5) குதிரைக் குளம்பரங்கு (........)

**5.** அபிக்ஞான சாகுந்தலத்தில் இடம்பெறும் பிரதான கதையுடன் இணைந்து எத்தனை அங்கங்கள் ஆக்கப்பட்டுள்ளன?
(1) மூன்று (2) நான்கு (3) ஐந்து
(4) ஆறு (5) ஏழு (........)

[பக். 2 ஐப் பார்க்க

**6.** எந்தையும் தாயும் நாடகத்தில் வரும் சங்கரப்பிள்ளை (பெரியையா) பாத்திரத்தை அக்காலத்தில் நடித்துப் புகழ் பெற்றவர்

(1) பிரான்சிஸ் ஜெனம் (2) எஸ். ரீ. அரசு
(3) நல்லை சுந்தா (4) செந்தில்நாதன்
(5) சிவயோகன் (........)

**7.** மாதவி தனது பதினொரு ஆடல்களின்போது கடவுளர்களின் கதைகளையே சித்திரித்தாள். அவள் சித்திரித்த கடவுட் பாத்திரம் **அல்லாதது**

(1) சிவன் (2) விஷ்ணு (3) விநாயகர்
(4) திருமகள் (5) முருகன் (........)

**8.** 'சூழலே அரங்காக அமைந்த' கூத்து மரபு

(1) வடமோடி (2) காமன் கூத்து
(3) காத்தவராயன் கூத்து (4) கோவலன் கூத்து
(5) தென்பாங்கு (........)

**9.** சமஸ்கிருத நாடகமான 'மிருச்சகடிகம்' எனும் பிரசித்தி பெற்ற நாடகத்தை எழுதியவர்

(1) பாசர் (2) ஸ்ரீ ஹர்சர் (3) காளிதாசன்
(4) அபிநவகுப்தர் (5) சூத்திரகர் (........)

**10.** பின்வருவனவற்றுள் இசைநாடக ஆற்றுகை தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்று யாது?

(1) நடிகர் தானே பாடி நடிப்பார்.
(2) ஹார்மோனியம் முக்கிய இசைக்கருவி ஆகும்.
(3) காப்புப் பாடல்களுடன் ஆரம்பிக்கும்.
(4) நடிகர் பாடிய பின்னர் பக்கப்பாட்டுக்காரர் பாடுவார்.
(5) கதை மகிழ்ச்சியுடன் நிறைவடையும். (........)

**11.** இராவணேசன் நாடகத்தில் பிரதான முரண்பாடு ஆரம்பிக்கும் இடம்

(1) இராமன் வருகை
(2) அங்கதன் தூது
(3) மண்டோதரி - இராவணன் கருத்து முரண்பாடு
(4) கும்பகர்ணன் போருக்குத் தயாராகுதல்
(5) இந்திரஜித்தின் இழப்பு (........)

**12.** 'பட்ட பாடெல்லாம் போச்சு பாழும் வயல் மிருகத்தாலே...' எனும் இசை நாடகப்பாடல் இடம்பெறும் நாடகம்

(1) நல்லதங்காள் (2) வள்ளியம்மை நாடகம்
(3) சம்பூர்ண அரிச்சந்திரா (4) நந்தனார் கீர்த்தனை
(5) பூதத்தம்பி (........)

**13.** தமிழக நாடக மரபில் சொல்லாடல் அரங்கைத் தோற்றுவித்தவர்

(1) பாலாமணி அம்மையார் (2) சங்கரதாஸ் சுவாமிகள்
(3) எஸ். ஜி. கிட்டப்பா (4) கே. பி. சுந்தராம்பாள்
(5) பம்பல் சம்பந்த முதலியார் (........)

**14.** தாயுமாய் நாயுமானார், சக்தி பிறக்குது போன்ற நாடகங்கள் குறித்து நிற்கும் விடயப் பொருள்

(1) வர்க்க அரசியல் (2) அரசியற் பிரச்சினை
(3) வர்க்க முரண்பாடு (4) சாதி ஒடுக்குமுறை
(5) பால்நிலை சமத்துவம் (........)

**15.** அரிஸ்டோட்டிலின் 'பார்ப்போர்' தொடர்பான சரியான கூற்று யாது?

(1) மேடையில் நடைபெறுவதற்கு ஏற்ப துலங்க வேண்டும்.
(2) நடிகர்கள் வெளிப்படுத்தும் பாவங்களுக்கு ஏற்ப ரச உணர்வை வெளிக்காட்ட வேண்டும்.
(3) உணர்ச்சிக்கு ஆட்படாது நாடகத்தைப் பார்த்துச் சிந்திக்க வேண்டும்.
(4) பொதுப் பார்ப்போராக இருந்து செயல்முனைப்புடன் பங்கேற்க வேண்டும்.
(5) தாமும் மேடைக்குச் சென்று நடிக்க வேண்டும். (........)

[பக். 3 ஐப் பார்க்க

**16.** மேலைத்தேய நாடகாசிரியர் எமிலிசோலா தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்று யாது?
(1) இயற்பண்புவாதத்தின் முதலாவது நாடகாசிரியர் ஆவார்.
(2) கதைப்பொருள் விஞ்ஞானபூர்வமானதாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.
(3) இயற்பண்புவாதத்தை மருத்துவத்தோடு நம்புவதில் மகிழ்ச்சி கண்டவர்.
(4) பார்ப்போர் முன்னிலையில் நடிகர் வாழாது நாடகம் ஆட வேண்டும் என்றார்.
(5) உண்மையான வாழ்வின் ஒரு பகுதியை மேடையில் காட்ட வேண்டும் என்றார். (........)

**17.** பாசர் படைத்த நாடகங்களுள் சிறந்த படைப்பாகக் கருதப்படுவது
(1) பஞ்சராத்ர (2) அபிசேக (3) கர்ணபாரதம்
(4) ஊருபங்க (5) ஸ்வப்ன வாசவதத்த (........)

**18.** நாடகப் பாத்திரமான கட்டியக்காரன் முறைமை
(1) வடநாட்டிற்குரியது (2) வடமொழி நாடகத்திற்குரியது
(3) தமிழ்நாட்டிற்குரியது (4) மார்க்க மரபிற்குரியது
(5) கேரளாவிற்குரியது (........)

**19.** கலாநிதி எஸ். ரகுநாதன் அவர்களால் பதிப்பித்து நூலுருவாக்கம் செய்யப்பட்ட நூல்
(1) வன்னிப் பிராந்தியக் கூத்துக்கள் (2) கோவலன் கூத்து
(3) காத்தவராயன் கூத்து (4) வட இலங்கை நாட்டார் அரங்கு
(5) மன்னார் மாதோட்ட நாடகங்கள் (........)

**20.** ஈடிப்பஸ் நாடகத்தின் பிரதான தொனிப்பொருள்
(1) விதியின் கையில் ஆட்டுவிக்கப்படும் மனித அவலம்
(2) உயர்பீடத்தில் இருந்தவர் தெய்வ சினத்தால் ஒதுக்கப்படுவார்
(3) அவல நாயகனின் மனித நிலைப்பட்ட துன்பம்
(4) தெய்வங்களுக்கு தீங்கு செய்யாதிருக்க வேண்டும்
(5) அவல நாயகனின் வீழ்ச்சி (........)

**21.** சமஸ்கிருத நாடக மரபில் நடிகனிடத்தே சுயமாகத் தோற்றம் பெறும் பாவம் எவ்வாறு அழைக்கப்படும்?
(1) அனுபாவங்கள் (2) சாத்வீக பாவம்
(3) விபாவம் (4) வியபிசாரி பாவம்
(5) சஞ்சாரி பாவம் (........)

**22.** பின்வருவனவற்றுள் சடங்கு - நாடகம் தொடர்பான ஜோன் ஹரீசனின் கூற்று யாது?
(1) வீர வழிபாடுகளே சடங்கின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தன.
(2) இலங்கை நாட்டார் அரங்கு சமயச் சடங்கினடியாகத் தோற்றம் பெற்றது.
(3) இந்திய நாடகத்தின் மூல வேர்களை இருக்கு வேதத்தில் காணலாம்.
(4) நாடக அம்சங்களைக் கொண்டுள்ள சமயச் சடங்குகளிலிருந்து மக்கள் அரங்கு தோன்றியிருக்க வேண்டும்.
(5) புராதன மனிதனுடைய சமயச் சடங்கிலேதான் நாடகத்தின் மூலவேர் உள்ளது. (........)

**23.** தமிழக நாடக மரபில் ஆடற்கலைஞர்களுக்கு திருவளவன், நாடகமையன், நிருத்தப்பேரரையன் போன்ற பட்டங்கள் வழங்கப்பட்ட காலம் யாது?
(1) சங்க காலம் (2) சங்கமருவிய காலம்
(3) விஜயநகரப் பேரரசுக் காலம் (4) நாயக்கர் காலம்
(5) சோழர் காலம் (........)

**24.** மன்னன் ஈடிப்பஸ் நாடகத்தில் இடம்பெறும் பின்வரும் உரையாடலைக் கருதுக.
A - அவன் சொல்வதைக் கேளுங்கள்! இத்தகைய வார்த்தைகள், அரசின் மீது இத்தகைய அவதூறுகள் ஒரு புனிதரைக் கூட சினத்துள் தள்ளும்.
B - சிறியோனுமல்ல உனது எதிரி நீயேதான்.
இங்கு A, B எனக் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் முறையே
(1) கோரஸ் - தெரீசியஸ் (2) கிறியோன் - ஈடிப்பஸ்
(3) தெரீசியஸ் - கிறியோன் (4) ஈடிப்பஸ் - தெரீசியஸ்
(5) ஜொகஸ்ரா - ஈடிப்பஸ் (........)

[பக். 4 ஐப் பார்க்க

**25.** சமஸ்கிருத அரங்க மரபில் நால்வகை வர்ணத்தினருள் வைசியருக்குரிய இடம் யாது?
(1) தென்மேற்கு மூலை (2) தென்கிழக்கு மூலை
(3) வடமேற்கு மூலை (4) வடகிழக்கு மூலை
(5) வடமத்திய மூலை (........)

**26.** பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் கூத்துப் புத்தாக்கத்தில் மேற்கொண்ட பணி யாது?
(1) பாடல்களை இரட்டித்துப் பாடுவது, உச்சத் தொனியில் பாடுவது என்பன முக்கிய இடம்பெற்றன.
(2) வட்டக்களரியிலிருந்து படச்சட்ட மேடைக்குக் கூத்துக்களைக் கொண்டு வந்தார்.
(3) அண்ணாவியாரும் பிற்பாட்டுக்காரரும் ஏடுபார்ப்போரும் நடுவிலேயே நின்றார்கள்.
(4) ஆண் பாத்திரங்களையும் பெண்களே நடித்தனர்.
(5) கூத்தினைப் பரதத்துடன் இணைத்தார். (........)

**27.** 1978 இல் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட அரங்க நிறுவனம்
(1) நடிகர் ஒன்றியம் (2) அரங்கச் செயற்பாட்டுக் குழு
(3) நாடக அரங்கக் கல்லூரி (4) அரங்க ஆய்வுகூடம்
(5) செயற்றிறன் அரங்க இயக்கம் (........)

**28.** சீன ஒபேரா நாடகத்தில் இராணுவத்தினர் அணியும் வேட உடையின் நிறம்
(1) வெள்ளை (2) கறுப்பு
(3) சிவப்பு (4) மஞ்சள்
(5) நீலம் (........)

**29.** வில்லியம் சேக்ஸ்பியரால் படைக்கப்பட்ட ‘மன்னன் லியர்’ நாடகத்தின் அரசன்
(1) இத்தாலிய றோம் நகரப் பேரரசன் (2) டென்மார்க்கின் அரசன்
(3) ஸ்கொட்லாந்தின் அரசன் (4) பிரான்சிய அரசன்
(5) பிரித்தானிய அரசன் (........)

**30.** பின்வருவனவற்றுள் யப்பானிய ‘கபுக்கி’ நாடகம் பற்றிய சரியான கூற்று யாது?
(1) யப்பானிய பிரபுத்துவ சடங்காசார வாழ்வின் காட்சியைச் சித்திரிப்பது
(2) சாமுராய் போர் வீரர்களின் கதையைக் கூறுவது
(3) சமயப்பண்பு கொண்டது
(4) பல்வேறு மூலகங்களிலிருந்து பலதையும் பெற்று செழிப்புற்ற ஆக்க வடிவம்
(5) பாரம்பரிய விகட நாடகம் (........)

**31.** சாகுந்தலம் நாடகத்தில் ‘அதிதி’ என அழைக்கப்படும் பாத்திரம்
(1) சகுந்தலையின் தோழி (2) அஸ்தினாபுரத்துப் பெண்
(3) காசிபர் மனைவி (4) சகுந்தலையின் வளர்ப்புத் தாய்
(5) பணிப்பெண் (........)

**32.** பேட்டோல்ட் பிறெஹ்ட் அவர்களின் நாடகச் சிந்தனை பற்றிய சரியான கூற்று யாது?
(1) தனியாள் / குடும்பம் பற்றிய கதைகளை முன்னிலைப்படுத்தியமை
(2) அரிஸ்டோட்டிலிய நடிப்புக் கோட்பாட்டைப் பின்பற்றியமை
(3) பாதுகாப்பு, சிக்கற்தன்மை, மருட்கை முதலிய கோட்பாடுகளுக்கமைய கதைகளை எழுதியமை
(4) பெரும்பாலும் சமூகம் அன்றேல் வரலாற்றுக் கதைச் சம்பவங்களை நாடகக் கதைப் பொருளாகக் கொண்டமை
(5) கதாநாயகர்கள், கதாநாயகிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட வீரர்களாக இருந்தமை (........)

**33.** பாரம்பரிய சிங்கள சடங்கரங்கில் மலட்டு ராணிகள் குழந்தை பெறுவதாகக் காட்டப்படும் சடங்கு நிகழ்த்தப்படும் அரங்கு எது?
(1) பூங்குடில் (2) வீட்டுவளவு
(3) சுடலை (4) வாடி வீட்டு முற்றம்
(5) சூடடித்த மேடு (........)

**34.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

அ - அம்பலத்தாடிகள் குழு, நாடக சபா, கூத்தாடிகள் குழு என்பவற்றை இணைத்து உருவாக்கப்பட்டது.
ஆ - திரு. ஏ. கே. கனகரட்னா தலைமை தாங்கினார்.
இ - இசை, நடனம், நாடகம் என்பவற்றை ஆற்றுகை செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்டது.
ஈ - மொழிபெயர்ப்பு நாடகங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.
உ - அரங்கம் எனும் சஞ்சிகையை வெளியிட்டது.

இவற்றுள் அவைக்காற்றுக் கலைக்கழகம் தொடர்பான கூற்றுக்கள் யாவை?

(1) அ, ஆ, இ (2) அ, இ, ஈ (3) ஆ, இ, ஈ
(4) ஆ, ஈ, உ (5) இ, ஈ, உ (........)

**35.** நவீன சிங்கள அரங்கில் 'அபேகட்டிய' எனும் இயக்கத்தை நிறுவியவர்

(1) சுகதபாலத டி சில்வா (2) ஹென்றி ஜெயசேன
(3) குணசேன கலப்பத்தி (4) ஆர். ஆர். சமரக்கோன்
(5) தம்மஜாகொட (........)

**36.** குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களினால் எழுதப்பெற்ற நடன நாடகம் யாது?

(1) எதிர்கொள்ளக் காத்திருத்தல் (2) அயலவன் யார்
(3) உறவுகள் (4) ஆர்கொலோ சதுரர்
(5) எங்கள் தவப்பயன் (........)

**37.** ஐரோப்பிய மத்திய காலத்தில் ரோமில் இருந்த கதைப்பாடல் ஓதும் மரபின் வளர்ச்சியாகத் தோன்றிய நாடக மரபு

(1) ஒழுக்கப்பண்பு இடை நிகழ்வு (2) பாணர் இசை நிகழ்வு
(3) வீர நாடகம் (4) விகட நாடகம்
(5) கிராமிய நாடகம் (........)

**38.** கிரேக்க நாடகங்களில் பயன்படுத்தப்படும் 'ஹமாசியா' என்பது பற்றிய **பிழையான** கூற்று யாது?

(1) குறி தவறு எனப் பொருள்படும்.
(2) தலைமகன் ஒருவன் இழைக்கும் தவறைக் குறிக்கும்.
(3) அவலத்தவறு எனவும் அழைக்கப்படும்.
(4) தலைவன் / தலைவி வீழ்ச்சியுற இதுவே காரணமாகும்.
(5) உணர்ச்சிச் செப்பம் எனவும் அழைக்கலாம். (........)

**39.** எலிசபெத் காலத்தில் பென்ஜோன்சன் அவர்கள் பணிபுரிந்த அரங்கு

(1) சுவான் தியேட்டர் (Swan Theatre)
(2) றோஸ் தியேட்டர் (Rose Theatre)
(3) ஹோப் தியேட்டர் (Hope Theatre)
(4) போச்சூன் தியேட்டர் (Fortune Theatre)
(5) த தியேட்டர் (The Theatre) (........)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ளவர் நடித்த சிறந்தொரு பாத்திரம்

(1) சைலொக்
(2) சகுனி
(3) பாஞ்சாலி
(4) துஷ்யந்தன்
(5) வீமன்



(........)

* *

[பக். 6 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers WiKi



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) II
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) II
Drama and Theatre (Tamil) II

58 T II

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

**1.** 'மனித மோதுகைகளின் கதையே நாடகம் ஆகும்.'

(i) நாடக மூலக்கூறுகளுள் மோதுகையின் வகிபங்கு யாது? (05 புள்ளிகள்)

(ii) 'ஈடிப்பஸ்' நாடகக் கதையமைப்பின் பிரதான மோதுகையைக் குறிப்பிட்டு, இந்நாடகத்தில் எந்தெந்த பாத்திரங்களின் ஊடாக மோதுகைகள் வெளிப்படுகின்றன என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

**2.** 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஐரோப்பிய மத்தியதரக் குடும்பமொன்றின் கதையைக் கூறுவதாக 'ஒரு பாவையின் வீடு' நாடகம் அமைகின்றது.

(i) இந்நாடகத்தில் வரும் ரோவால்ட் கெல்மர், குரொக்ஸ்டட் ஆகிய இரண்டு பாத்திரங்களினதும் குணவியல்புகள் **ஐந்து** வீதம் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) இந்நாடகத்தின் பிரதான பாத்திரமான 'நோறா' வளர்த்தெடுக்கப்படும் முறையைக் குறிப்பிட்டு, அப்பாத்திரம் எடுக்கும் தீர்மானம் சரியானதே என்பதை உமது கண்ணோட்டத்தில் விளக்குக. (10 புள்ளிகள்)

**3.** (i) கிங்லியர் நாடகம் வழமைக்கு மாறாக மூன்று கருக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றினைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) வில்லியம் சேக்ஸ்பியரின் படைப்புக்களில் சிறந்த அவலச்சுவை நாடகம் என கிங்லியர் நாடகம் போற்றப்படுவதற்கான காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, விளக்குக. (10 புள்ளிகள்)

### உபபகுதி B

**4.** "அங்கதன், இராமன், மண்டோதரி, கும்பகர்ணன், இந்திரஜித் ஆகிய பாத்திரங்களைச் சந்தித்து உரையாடுவதன் மூலமாகவே இராவணப் பாத்திர உருவாக்கம் நிகழ்கின்றது." இராவணேசன் நாடக எழுத்துருவினை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

**5.** இலங்கைத் தமிழ் நாடக அரங்க மரபில் 1980 தொடக்கம் 1990 வரையிலான காலப்பகுதியில் நிலவிய அரசியல் அரங்க மரபு பற்றி விவரிக்குக. (15 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) காளிதாசர்
(ii) தொலைக்காட்சி நாடகங்கள்
(iii) மத்தியகால அற்புத நாடகங்கள்
(iv) நூர்த்தி நாடக மரபு
(v) பீஜிங் ஒபேறா

(05 × 3 = 15 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

* * *

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library